★ விலை ரூபா 1-25


# ஈழநாடு
THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆனி 1 ரம்ழான் 14 இதழ் 121

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 15-6-84


... OF JAFFNA, SRI L... PERIODICALS DIVISION 15-6-...

# தங்கப்பாளம் கடத்தல்: ரூ. 3,22,000 அபராதம்!

(யாழ்ப்பாணம்)

தலைமன்னார் மூலம் இந்தியாவிற்கு 20 தங்கப்பாளங்களைக் கடத்த முற்பட்ட நால்வருக்கு தலைமன்னார் சுங்க கலெக்டர் திரு. பாலேந்திரா 3,22,000 ரூபா அபராதம் விதித்தார்.

அபராதம் கட்டத்தவறியதால் நால்வரும் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மூன்று மாதத்திற்குப்பின்னர் இராமேஸ்வரம் கப்பலில் இந்தியாவிற்கு அடிக்கடி சென்றுவரும்நபர் ஒருவரான கடைமுதலாளி, தலைமன்னார் துறைமுகத்தில் கடமையாற்றும் இருபோட்டர்களின்உதவியுடன் 20 தங்கப்பாளங்களை இந்தியாவிற்குக் கடத்திச் செல்லத் திட்டமிட்டபோது பொலிசாரிடம் சிக்கிக் கொண்டதாகவும், பின்னர் பொலிசாரும் அவர்களுடன் சேர்ந்து தங்கப்பாளங்களைப் பங்குபோட்டசமயம் இராணுவத்தினரிடம் சிக்கிக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

இவர்கள் நால்வரும், சுங்கப் பகுதியினரிடம் ஒப்படைக்கப்

(8ம் பக்கம் பார்க்க)



# ஜனாதிபதி - இந்திரா 30-ல் சந்திப்பு



## இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றி ஆராய்வார்கள்

(கொழும்பு)

அமெரிக்காவில் இருவாரகால விஜயத்தை மேற்கொண்டு நேற்றிரவு வாஷிங்டன் புறப்பட்ட ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இலங்கை திரும்பும் வழியில் இம்மாதம் முப்பதாம் திகதி மூன்று நாள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு இந்தியாவுக்கு விஜயம் செய்வார்.

இலங்கை ஜனாதிபதி இந்தியப்பிரதமருடன் இலங்கைத் தமிழர்பிரச்னை, இலங்கையின் அரசியல் தலைவர்கள் இந்தியாவிற்கு எதிராக இலங்கையில் மேற்கொண்டுவரும் பிரசாரங்கள் ஆகியன குறித்தே பேச்சுவார்த்தை நடத்தவுள்ளாரென்று தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி தம்பதியினர் நேற்றிரவு அமெரிக்கா புறப்பட்டனர்.

இவர்கள் அங்கு இம்மாதம் 30-ம் திகதிவரை தங்கியிருப்பார்கள்.

ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன அமெரிக்காவில் தங்கியிருக்கும் போது ஜனாதிபதி திரு. ரொனல்ட் றீகன், வெளிநாட்டமைச்சர் ஜோர்ஜ் ஷீல்ஸ் ஆகியோரைச் சந்தித்து இரு நாடுகளின் முக்கிய விவகாரங்கள், நல்லுறவுகள் ஆகியன குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

### ஜனாதிபதி பேட்டி

இலங்கை மீது தமிழ்நாடு இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளாது என்று தாம் நம்புவதாக ஜனாதிபதி ஜெயவர்த்தன பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் இலங்கை மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட மாட்டாதென்று தெரிவித்துள்ளதாகவும் ஜனாதிபதி அப்பேட்டியில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இம்மாதம் 30-ம் திகதி மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு இந்தியா செல்லவுள்ளார்.

இவர் இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் அழைப்பை ஏற்றே அங்கு செல்கிறார்.

## கவுணவத்தை வேள்வி: இருபக்க உடன்பாடு

(யாழ்ப்பாணம்)

கீரிமலை கருகம்பானை கவுணவத்தை வைரவர் கோவில் வேள்வி தொடர்பாக சுமுகமான ஒரு உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

இம்முறை ஆடம்பரங்கள் கேளிக்கைகள் எதுவுமின்றி வேள்வியினை நடத்துவதென்றும் ஆனால் அடுத்த ஆண்டிலிருந்து வேள்வியில் உயிர்ப்பலியிடுவதைத் தவிர்ப்பதென்றும் உடன்பாடு ஏற்பட்டிருக்கின்றது.

வேள்வியின் பெயரால் சமூகங்களுக்கிடையில் மோதல்கள் உருவாகாமல் தடுக்கவேண்டும் என்ற சமூக உணர்வுகொண்ட இளைஞர்களால் இந்த உடன்பாடு ஏற்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதேசமயம் இவ்வேள்வியின்போது உயிர்ப்பலியைத் தடுப்பதற்கான அரச மட்டத்திலான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

## நல்லூர் 'இந்து விடுதி': ஒரு குறை நீக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங்கையில் எங்குமே ''இந்து விடுதி'' இல்லாத குறையை யாழ். மாநகரசபை இன்று தீர்த்து வைத்துள்ளது.

''இந்து விடுதி'' எனப் பெயர் இருப்பதால், இந்துக்கள்மட்டும் தங்குவதற்கு என்று அர்த்தமல்ல. இவ்விடுதியில் எல்லா மதத்தவர்களும் தங்கலாம். ஆனால் இங்கு தங்குவோர் சைவமதசூழலை அனுசரித்து நடந்துகொள்வது நல்லது.

நல்லூர் 'இந்து விடுதி'யை நேற்று நண்பகல் திறந்துவைத்துப் பேசிய யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் மேற்கண்டவாறு கூறினார்.

ஆணையாளர் திரு. சிவஞானம், பிரதம மராமத்துப் பொறியியலாளர் திரு. எம். தவரத்தினம் மின்சாரப்பொறியலாளர் திரு. வி. நவரத்தினராசா ஆகியோர் விடுதிவாசலில் மாலை சூட்டி வரவேற்கப்பட்டனர்.

ஆணையாளர் திரு. சிவஞானம் நாடாவை வெட்டி 10 அறைகளைக்கொண்ட நல்லூர் 'இந்துவிடுதியை' திறந்து வைத்ததுடன் ஞாபகார்த்தக் கல்லை திரை நீக்கம் செய்தார்.

இதனைத் தொடர்ந்து மரா

(8ம் பக்கம் பார்க்க)

## லொறி — ஜீப் விபத்து

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை வீதியில் நேற்று முன்தினம் ஆயுதம் தாங்கிய இரு இளைஞர்களினால் 'டாட்டா' பென்ஸ் லொறியொன்று கடத்தப்பட்டது.

இந்த லொறி கடத்தப்பட்ட 4மணி நேரத்தின் பின்னரே பொலிசாருக்கு அறிவிக்கும்படி லொறி உரிமையாளரிடம் அந்த இளைஞர்கள் கூறினர்களாம்.

பின்னர் அதேலொறி யாழ். றீகல் தியேட்டர் சந்தியில் நின்ற பொலிஸ் ஜீப்புடன் மோதியது. இதனால் அந்த ஜீப்பிலிருந்த ஒரு உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட மூன்று பொலிசார் காயமடைந்ததாகக் கூறப்பட்டது.

இளைஞர்கள் லொறியைக் கைவிட்டுவிட்டு ஓடிவிட்டார்களாம். இதுதொடர்பாக விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (வெ)

## சிங்கராயர், நிர்மலா வழக்கு: இன்று விசாரணை

(கொழும்பு)

வண. பிதா சிங்கராயர், திருமதி நிர்மலா நித்தியானந்தன் ஆகியோருக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட வழக்கு இன்று கொழும்பு உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளது.

திருமதி நிர்மலா நித்தியானந்தன் சமுகமளிக்காத நிலையிலும் அவருக்கெதிரான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படுமென்று தெரியவருகிறது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தை தாக்கிய சந்தேகநபர்களுக்கு புகலிடமளித்தார்கள் என்று இவர்கள் மீது குற்றம்

(8ம் பக்கம் பார்க்க)

## ★ தமிழ்நாடு செல்லவிருந்த பெண்ணிடமிருந்து தங்கம், நாணயம் பறிமுதல்!

(மன்னார்)

இராமேஸ்வரம் கப்பலில் நேற்று தமிழ்நாடு செல்லவந்த கொழும்பு பெண்ணிடமிருந்து சுங்கப்பகுதியினர் தங்கக் கட்டிகளையும், நாணயங்களையும் கைப்பற்றினர்.

இப்பெண்ணின் நடமாட்டத்தில் சந்தேகம் கொண்ட சுங்க அதிகாரி அப்பெண்ணை சோதனையிடுமாறு உத்தரவிட்டார்.

இச் சோதனையின் போது பெண்ணின் சட்டைக்குள் தங்கக் கட்டிகளும் 1,097 ரூபா இலங்கை-நாணயமும் 340ரூபா இந்திய நாணயமும் கண்டு பிடிக்கப்பட்டது.

சுங்க கலெக்டர் திரு. பாலேந்திரா உதவி கலெக்டர் திரு. இ. பொன்னையா, சுங்க அதிகாரி திரு. ஏ. டி. டி. பெரேரா ஆகியோர் விசாரணை நடத்தினார்கள்.

தங்க கட்டிகளையும் நாணயங்களையும் பறிமுதல் செய்து அப்பெண்ணை பயணம் செய்ய அனுமதித்தனர். (சு)

### வெங்காயம்

(கொழும்பு)

சின்னவெங்காயம், பம்பாய் வெங்காயத்தை இறக்குமதி செய்ய தனியார்களுக்கும் அனுமதி வழங்கப்படுமென்று வர்த்தக, கப்பல்துறை அமை[illegible] தெரிவித்தார் (வெ)

## இரு இலங்கையர் மீது பிரான்ஸில் வழக்கு

(பாரிஸ்)

மூன்று இலங்கைப்பிரஜைகளை பிரான்ஸ் தேசத்துக்குள் சட்ட விரோதமாக கொண்டு செல்ல முயன்ற இரண்டு இலங்கையர் மீது பிரான்ஸ் அரசாங்கம் வழக்குத்தொடரவுள்ளது.

தவராசா மாணிக்கம், கந்தையா ஆகிய இந்த இரண்டு இலங்கையரும் போர்த்துக்கல் நாட்டிலிருந்து ஸ்பெயின் தேசத்தின் ஊடாக பிரான்சின்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி சிறுப்பிட்டியில் (கிருஷ்ணு மில்லிற்கு அருகாமையில்) 7 பரப்பு தென்னம் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- வை. பொன்னம்பலம் ஆசிரியர், சிறுப்பிட்டி. 256

கேரதீவு நாவற்குழி றோட்டில் 7ம் கட்டையடி வயல், நன்னீர் கிணறு தென்னந் தோட்டம் உட்பட 100 பரப்பு விற்பனைக்கு உண்டு. எஸ். கே. திரவியநாயகம் தபாலக வீதி சாவகச்சேரி. 251

வீடுகட்டக்கூடிய ஐந்து பரப்புக்காணி சண்டிலிப்பாய் மத்தியில் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: இ. குகேந்திரன் தபாற்கந்தோர் மல்லாகம். 255

ஆஸ்பத்திரி வீதி றயில்வே ஸ்ரேசன் சந்தியிலிருக்கும் இரண்டு கடையும் பின்னுல் வீடுகட்டக்கூடிய வளவும் கிணறும் கக்கூஸ்சும் உண்டு. தொடர்பு: K. பொன்ராசா 82, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 164

ICMA (A) பொருளியல் வகுப்புக்கள் 16-6-84 சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகின்றது. சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமைகளில் 8-30 — 10-30 வரை வகுப்புக்கள் நடைபெறும். சிறப்புப் பொருளியல் பட்டதாரி ஆசிரியரினுல் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. யாழ்ப்பாணக் கல்விநிலையம், சுகந்திரத்தியேட்டருக்கு அருகாமை யாழ்ப்பாணம். 238

## விற்பனைக்கு

கட்டுடை உபதபாற்கந்தோரடி காரைநகர் றோட் மானிப்பாயில் மின்சாரம் தண்ணீர் வசதி கொண்ட 6 அறை வீடு 5 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: கங்காதரம் மில், சீரணி சந்தி சண்டிலிப்பாய். 267

ஒரு நாள் (Cross Broilers) பேட்டுக் குஞ்சுகள் ''ராதா கிருஷ்ணுஸ்'' 392, நாவலர் வீதி, நல்லூர். 271

WANTED

Suitably qualified Female Accounts Clerk, Steno-typist cum Clerk. Apply in writing UNIFO, Momsac Building, 11C, Stanley Road, Jaffna. 250

## வாடகைக்கு

யாழ். சலூசலா நிலையத்திற்கு அருகாமையில் உள்ள இரண்டு கடைகள் வாடகைக்கு உள்ளன. மேலதிக விபரங்கட்கு: க. கந்தகுமாரன் 8. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 272

## கல்வி

G. C. E. (O/L) மாணவருக்கு ஆங்கில இலக்கணம், இலக்கியம் (Grammar, English Literature) Radio and T. V. English Lessons, Spoken English தனிப்பட்ட முறையாக ஆரம்பத்திலிருந்து கற்றுக்கொடுக்கப்படும். S. Kumaravelu, Ret: Principal English Mobile Unit Inspector Gurusamy House ஓட்டுமடம் யாழ்ப்பாணம். 269

# இன்றைய பலன்

மாதம்—ஆனி
திகதி—1 (15-6-1984)
வாரம்—வெள்ளி
திதி—துதியை - இரவு 8-32 வரை
நட்சத்திரம்— பூராடம் இரவு 11-28 வரை

மேடம்: இன்னலின் பின்னல் சோர்வைத் தரலாம் வணிகத்துறையில் சமவருவாய்க்கு இடமுண்டு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வெற்றிக்கு வழிகாட்டும்.

இடபம்: நேர்முகப் பரீட்சைக்கு உகந்ததினம் தெய்வத்தின் அருள் தாராளமாகக் கிடைக்கும் அரசியல் வாதிகளுக்கு ஆதரவு கிடைக்கும்.

மிதுனம்: மனப்போராட்டங்கள் இடம்பெறும் உடல் நலம் பாதிக்கப்படலாம் குடும்பத்தில் ஏற்படும் மோதல்கள் விரக்திமனப்பான்மையை உருவாக்கும் அடக்கம் வேண்டும்.

கடகம்: ஒளிபரப்பும் வாழ்க்கை உறவினர் மத்தியில் ஒற்றுமை மலரும் எதிர்பார்த்ததைவிட அதிகம் கிடைக்கலாம் பொன்னுன தினம்.

சிங்கம்: வரவேற்க வேண்டிய சம்பவங்கள் இடம்பெறும் புத்திரரால் பெறும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு உள்ளத்தில் உவகை துள்ளும் அரசினர் ஆதரவும் கிடைக்கலாம்.

கன்னி: சிறிய விடயம்கூட இன்று சிரமமாகத் தோன்றும்

(7-ம் பக்கம் பார்க்க)

## வேலாயுதம் மகாவித்தியாலயம் பருத்தித்துறை

பாடசாலையிலிருந்து விலகியோருக்கான வார இறுதி ஆங்கில வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகும். க. பொ. த. ப. (சா. த.) பரீட்சை சித்தியடைந்தவர்கள் 22-06-84 வெள்ளிக்கிழமைக்கு முன் விண்ணப்பங்களை அதிபருக்கு அனுப்பவும்.

போதனைக்கட்டணம் மாதம் ரூபா 12/50.


சே. ஏகாம்பரநாதன்
அதிபர்

(264)

## ஓராண்டு நினைவஞ்சலி

### வரதராஜா இரத்தினம்

19-9-1949 அன்னையின் மடியில்
27-6-1983 அரனின் திருவடியில்



அன்பின் திருவுருவாய் அறிவின் பிறப்பிடமாய் பண்பின் ஒளிச்சுடராய், இனியவனுய், குடும்ப விளக்காய் ஒளிகாட்டி எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்ட அன்புச்செல்வமே! உங்கள் ஆத்மாசாந்தியடைய நாம் அனைவரும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம். உங்கள் பிரிவால் துயருறும்

பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள்.
கல்வத்தை ஒழுங்கை, காங்கேசன்துறை. 270

## முக்கிய அறிவித்தல்

### மின் விநியோகம்

1984-ம் ஆண்டு யூன் மாதம் 17-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6-00 மணி தொடக்கம் பிற்பகல் 18-00 மணி வரை முக்கிய கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு அனுராதபுரம் - யாழ்ப்பாணம் 132 கே. வி. மின்மார்க்கம் தடை செய்யவிருப்பதால் கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், துணுக்காய், முல்லைத்தீவு, சுன்னுகம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வேலணை போன்ற இடங்கள் அடங்கிய கிளிநொச்சி யாழ். பிரதேசங்கள் பெரும்பாலான பகுதிகள் மின்சார விநியோகம் தடைப்படும் என அறியத்தருகிறேன்.

மின் பொறியியலாளர்
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னுகம். 253



புதிய டீபாக PL-4 லேத் மெசின்
3 AND 4 ஜோ சக்குடன்

## விற்பனைக்குண்டு

பூரண விளைத்திறனுடைய சிகப்பு ரக பம்பாய் வெண்காய விதைகள் விற்பனைக்குண்டு.

**பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்**
257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 257

## Vacancy For Civil Foreman/ Supervisor

REFUGEES' REHABILITATION FUND—1983

Applications are invited from suitably qualified persons in Civil Engineering Field to fill the above vacancy.

Applicants from the displaced persons of July 1983 disturbances will be given preference.

Apply with bio-data before 25th June, 1984 to-

REFUGEES' REHABILITATION FUND—1983
YMCA Building, Kandy Road, Jaffna. 254

மத்தியகிழக்கு நாடுகளில்

## வேலைவாய்ப்புக்கள் உண்டு

தேவை:

**ஆஸ்பத்திரி கிளிநேர்ஸ்** (CLEANERS)

வயது: பெண்கள்: 22 தொடக்கம் 35 வரை
ஆண்கள்: 22 தொடக்கம் 36 வரை

**சம்பளம்: 3000/-**

விண்ணப்ப முடிவு திகதி: 17 - 06 - 1984

QUICK DEPARTURE: 28th To 30th June 84

**INTER TRADE AGENCIES**
23, ALOE AVENUE, COLOMBO-3

விண்ணப்பங்களை கீழ் வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும்.

திரு. வி. ஸ்ரீவைகுந்தன்,

**விஸ்வம் பார்மஸி**

சண்டிலிப்பாய்.

Labour Licence No. 199
Approval No. FE/G/FEA/181/4538 (245)

ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
பூகொடை ஆலைத்துணிகள்

யாழ். புடவை வியாபாரிகட்கு

**ஓர் அரிய சந்தர்ப்பம்**

எம்மிடம் பணம் நிலையாக வைப்புச் செய்த வியாபாரிகட்கு அவர்கட்குரிய **30% வருடவட்டி வழங்குவதுடன்** புடவை வகைகளும் கடன் வசதியுடன் வியாபாரத்திற்கு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்

**NATIONAL DELUXE**
**மின் விசிறிகள்**
கடன் வசதியுடன் உண்டு

விபரங்கட்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்**

82, கன்னுதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24310

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “‘தனிநாடு’ பிரகடனம் ஒன்றை வெளியிடச் சீக்கியத் தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்தனர்!

## மத விவகாரங்களுக்காகப் போராடுவதாக மக்களின் ஆதரவைப் பெற்றனர்!”

(புதுடில்லி)

**தனிநாடு பிரகடனம் ஒன்றை வெளியிட வெளிநாடு ஒன்றின் ஆதரவுடன் சிக்கியத் தீவிரவாதிகள் திட்டமிட்டிருத்தது தெரியவந்திருப்பதாக இந்திய உள்துறை அமைச்சின் செயலாளர் திரு. எம். எம். வாலி தெரிவித்துள்ளார்.**

மதவிவகாரங்களுக்காக போராடுவதாகக் கூறி சீக்கியர்களின் ஆதரவைப்பெற்றிருந்த இவர்கள் தனிநாடு பிரகடனத்தை அறிவிக்க தயாராக இருந்தது சாட்சியங்கள் மூலம் புலப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மக்களின் இந்த ஆதரவினுல் சிவில் நிர்வாகத்தின் ஒருபகுதியையும் முடக்கி விடமுடிந்தது என்றும் அவர் கூறினர்.

இத்தீவிரவாதிகள் பாகிஸ்தானிலும், ஜம்முகாஷ்மீரிலும் பயிற்சி பெற்றதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் திரு. வாலி, சமயப் பயிற்சி முகாம்கள் என்ற போர்வையில் இத்தீவிரவாதிகள் பஞ்சாப்பிலும் பயிற்சி பெற்றனர் என்று தெரிவித்து கூறினர்.

# எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு பிரதமர் இந்திரா விளக்கினர்!

## அரசின் நடவடிக்கைக்கு சகலரும் பாராட்டு

(புதுடில்லி) பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்று முன்தினம் பஞ்சாப் ‘பொற்கோயில்’ தாக்குதல் குறித்து இந்தியப் எதிர்க்கட்சி தலைவர்களுக்கு விளக்கிக் கூறினர்.

தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக பிரதமர் திருமதி காந்தி தெரிவித்தபோது, சந்திப்பில்கலந்து கொண்து ஏழு எதிர்க்கட்சித் தலைவர்களும் பாராட்டுத் தெரிவித்தனர்.

இச்சந்திப்பின்போது பிரதமருக்கு உதவியாக அரசின் மூன்று சிரேஷ்ட அமைச்சர்கள் கலந்துகொண்டனர். திரு. சரண்சிங், ஜெகஜீவன்ராம், மது தண்டவதே உட்பட ஏழு எதிர்க்கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

ஆலயங்களை ஆயுதக்குதங்களாகப் பாற்றியதை எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் கண்டித்ததுடன் உண்மை நிலையை மக்கள் அறிந்து கொள்வதற்காக பஞ்சாப்பில் பத்திரிகைத் தணிக்கையை தளர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

பத்திரிகைகள் உண்மைகளை மட்டுமே வெளியிடுமா என்பதில் சந்தேகம் இருப்பதால் பத்திரிகைத் தணிக்கையைத் தளர்த்துவது நிலைமையை மோசமடையச் செய்துவிடும் என்று தெரிவித்த பிரதமர், உண்மைநிலையை விளக்கி அறிக்கை ஒன்றை அரசு வெளியிடும் என்று தெரிவித்தார்.




## உலகில் மொத்தம் 10 கோடி அடிமைகள்

(லண்டன்)

உலகில் இன்று 10 கோடி அடிமைகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சிபெற்ற மேற்குலக நாடுகளிலும், அதனைச் சார்ந்துள்ள நாடுகளிலும் லட்சக்கணக்கான மக்கள் அடிமைகளாக உள்ளனர் என்பதற்கு ஆதாரங்கள் பலவற்றைக் காட்டி இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் சமுதாயத்தில் மட்டும் ஐம்பது லட்சம் சிறுவர்கள் பலவந்த உழைப்பிலீடுபடுத்தப் பட்டிருக்கிருர்கள். 20 லட்சம் பேர் விபசாரம் செய்கிருர்கள். அடிமைமுறை இன்னமும் ஒழிக்கப்படவில்லை. அடிமை எதிர்ப்பு சமூகமான பிரிட்டனில் 10 கோடி மக்கள் உரிமையற்றவர்களாக இன்னமுமுள்ளனர். அமெரிக்காவில் இந்நிலை இன்னும் மோசமாக உள்ளது. கூலித் தொழிலாளர்கள் விற்கப்படும் முறை இன்னமும் அங்கு நிலவுகிறது. ‘பின்ஹெய்தி’ என்ற வர்த்தகர் ஆண்டுதோறும் 20,000 கூலித் தொழிலாளர்களை தோட்டப்பகுதிகளுக்கு ஆண்டுதோறும் விநியோகம் செய்து வருகிருர். ஒரு நபருக்கு 100 டாலர்கள் வரை கிடைக்கிறது. அண்மையில் உள்ள டொமினிகள் குடியரசுக்கு இத்தொழிலாளர்கள் அனுப்பப்படுகிருர்கள்.

பல்தேசிய நிறுவனங்கள் பெரும்பாலாக இயங்கும் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் சிறுவர் பலவந்தமாக உழைப்பிலீடுபடுத்தப்பட்டுள்ளனர். மலிவான கூலி உழைப்பில்பெரு லாபத்தை இந்த நிறுவனங்கள் ஈட்டிவருகின்றன.

தாய்லாந்தில்சுமார் பத்து லட்சம் இளம்தொழிலாளர்கள் பலவந்தமாக உழைப்பிலீடுபடுத்தப்பட்டுள்ளனர். தென்கொரியா, தாய்வான், ஹொங்கொங், பிலிப்பைன்ஸ், கொலம்பியா போன்ற இதர நாடுகளிலும் இதேநிலைமைதான். ஐரோப்பாவிலும் இத்துயர் மிகு நிலை காணப்படுகிறது. இத்தாலி இதில் முன்னணியில் நிற்கிறது. 50,0000 சிறுவர்கள் அடிமை உழைப்பிலீடுபடுத்தப்பட்டுள்ளனர் என்னும் இப்பத்திரிகை எழுதுகிறது.

### அமெரிக்க பாராளுமன்றத்தில்

## ‘எம்.எக்ஸ்’ ஏவுகணைவிவாதம் ஆதரவு 229; எதிர்ப்பு 199

[நியூயோர்க்]

முதல் தாக்குதல் ஆயுதமான ‘எம் எக்ஸ்’ ஏவுகணைகள் மீண்டும் அமெரிக்க காங்கிரஸின் நிகழ்ச்சி நிரலில் இடம்பிடித்துள்ளன.

மீபத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் புதிய ‘எம் எக்ஸ்’ ஏவுகணைகளை உற்பத்திக்காக 310 கோடி டாலர்களை ஒதுக்குவது பற்றி ஆலோசனை செய்தனர்.

கடந்த ஆண்டு இத்தகைய 21 ஏவுகணைகளை நிறுத்துவதற்கான நிதிக்கு பெடகன் அங்கீகாரமளித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சபையின் விவாதத்திற்கு முன்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் “இந்த ஏவுகணைகளை உற்பத்திசெய்வதற்கான நிதியை ஒதுக்க மறுத்தால், அணு ஆயுதங்கள் மீதான கட்டுப்பாட்டுத்துறையிலான முயற்சிகளை சோவியத்யூனியன் அலட்சியம் செய்துவிடும்” என்று ஜனதிபதி றீகன் சுட்டிக்காட்டியிருந்தார்.

இப் பத்திரிகையாளர் மகாநாட்டிற்குப் பின்னர், ஜனதிபதி காங்கிரஸ் பிரதிநிதிகள் குழுவொன்றை வெள்ளை மாளிகைக்கு அழைத்து பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

ஏவுகணைகளின் உற்பத்திக்கான நிதியை ஒதுக்குவதற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு இப் பிரதிநிதிகளை ஜனதிபதி றீகன் வலியுறுத்தியிருந்தார்.

இவ்வாண்டில் 15 ‘எம் எக்ஸ்’ ஏவுகணைகளை நிறுத்திவைப்பதற்கான பிரேரணைக்கு ஆதரவாக 229 பிரதிநிதிகளும் எதிராக 199 பிரதிநிதிகளும் வாக்களித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

எமக்குத் தெரிந்ததைத் தெரிந்ததென்றும், தெரியாததைத் தெரியாததென்றும் அறிந்து கொள்வதே உண்மையான அறிவு.

— தோரோ

## நமது நோக்கு

# நம்பிக்கை ஊட்டும் நற்செய்தி

வருகிற புதன்கிழமை [யூன் 20] ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் அவருடைய கூட்டத்தினரும் அமெரிக்காவிலுள்ள புதுமெக்ஸிக்கோவிற்கு விஜயஞ் செய்யவிருக்கின்றனர். இது நியூயோர்க்கிலிருந்து வந்த விசேடசெய்தி.

புதுமெக்ஸிக்கோவில் சாந்தா ப்வ்எ (Fey) என்றொரு மாநிலத்தில் வாழும் அமெரிக்க இந்தியர்களைச் சந்திப்பதே இந்த விசேட விஜயத்தின் நோக்கம்.

புவெப்லோ சாந்தா டொமிங்கோ (Pueblo Santa Domingo) என்ற இடத்திலுள்ள மிகப்பிரசித்திபெற்ற பண்டைய இந்திய கிராமத்திற்கு விமான மூலம் ஜனாதிபதியும் கூட்டத்தினரும் சென்றடைவார்கள். இந்த மாநிலம் புதுமெக்ஸிக்கோவின் தலைநகருக்கு அடுத்தாற்போல் உள்ளது.

சரித்திர ஆய்வில் பசியும் தாகமும் கொண்ட ஜனாதிபதி இங்கு நெடுங்காலமாக வாழ்ந்துவரும் இந்திய சமுதாயத்தினரையும் அவர்கள் தலைவர்களையும் சந்தித்து உரையாடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆண்டவனே! இலங்கை வாழ் 'சிறுபான்மை'த்தமிழ் இனம் (இந்தியாவிலிருந்து ஆதியில் வந்து குடியேறிய குடிகளின் இன்றைய வழித்தோன்றல்கள்) இவ்விஜயத்தில் கவனம் செலுத்த நியாயமுண்டு! நம்பிக்கை ஒளி தங்கள் வாழ்வில் வீசுமோ என்று நினைக்கவும் இடமுண்டு.

ஏன் அவ்வாறு கூறுகின்றோம்?

அமெரிக்காவின் ஆதிக்குடிகள் இந்தியர்களேஎன்று வாதாடும் இந்த சிவப்பு இந்தியர்கள், இந்த மாநிலம் தங்களுக்குரியதென்கிறார்கள். ஆனால் இன்று உரிமைகள் எல்லாம் இழந்த ஒரு சிறுபான்மை இனமென மதிக்கப்படுகின்றனர்.

''ஆட்சியாளர் பல வாக்குறுதிகளை எங்களுக்கு வழங்கினர். ஒன்றைவிட மற்றெல்லாவற்றையும் காற்றில் பறக்கவிட்டனர்; அந்த ஒன்று; எங்கள் நிலத்தை எடுப்போம் என்றனர்; அதனை எடுத்துவிட்டனர்''.

இதுவே அமெரிக்க இந்தியரின் உள்ளக்கொதிப்பு; இதற்கு அங்கு ஆதரவில்லாமலில்லை.

இலங்கை வாழ் தமிழ்மக்களின் கதிபற்றி ஜனாதிபதி ஜெயவர்த்தன நிச்சயம் களைப்படைந்திருக்க வேண்டும், அதுவும் இன்று இந்தியாவுடன் போர் தொடுக்கும் அப்பியாசம் அவரைக் கலக்கியிருக்கும்.

இந்த விஜயம் எங்கள் நிலைமையில் ஒரு திருப்பம் கொண்டு வரலாமென்று நினைப்பது மனப்பாலா?

எது எவ்வாறாயினும் அவருடைய அமெரிக்க விஜயம் பற்றி பரவிவரும் வியாக்கியானங்கள் பல வெறும் வதந்திகளே!

# ஆங்கிலத்தின் அந்தஸ்து

''பதினொரு வயதுவரைக்கும் இங்கிலிஸ் 'தூள்' ஒரு கொஞ்சமும் என்னிடம் இருக்கவில்லை'' என்கிறார் இலங்கையின் மிகச் சிறந்த சத்திர வைத்திய நிபுணர் டாக்டர் பீ. ஆர். அந்தனிஸ் அவர்கள்.

கொழும்புப் பல்கலைக்கழக வேந்தராகப் பணிபுரியும் இப்பெரியார் தமது இரேட்ட கல்வி ஆரம்பமானபோதே ஆங்கிலம் கற்கத் தொடங்கினதாக அண்மையில் ஒரு வைபவத்தில் உரையாற்றியிருக்கிறார்.

பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களைத் தமது அற்புத சாதனையால் தப்பவைத்த பிரபல நிபுணர் அந்தனிஸ் தங்கள் காலத்தில் மாணவர் பட்ட கஷ்டங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்.

பதினொரு வயதில் ஆரம்பமான ஆங்கிலம்அவருடைய மருத்துவ சாதனைகளுக்குப் பாதகமாக விருக்கவில்லையென்பதை அறிக.

இந்த நிலையில், அதுவும் இன்று ஒன்பது வயதில் ஆங்கிலம் கற்பது கற்பிப்பது எவ்வாறுஎன்று 'கல்வி வியாபாரிகள்' கருத்தரங்குகள் நடத்திக் காலத்தை வீணாக்குகின்றனர்.

ஆங்கிலம் தேவை; அதிலும் கூடிய தேவை அறிவு. அறிவு வளர்ச்சியடைவது தாய்மொழியிலே. அதற்குரிய வேறு சாதனங்களில் ஆங்கிலம் இன்று மிக அவசியம். அதனை உணராது ஆங்கிலத்தைக் கட்டிஅழுபவர்கள் அறிவிலிகள்!

வேந்தர் டாக்டர் அந்தனிஸ் ஆற்றிய உரையின் சாராம்சம்: எந்தக் கஷ்ட நிலையிலும் தேவையைப் பூர்த்தி செய்ய உதவுவது ஊக்குவித்தல் என்பதேயாகும்.

# பெறுமதிமிக்க சிலை ஒன்றை பொலிசார் கைப்பற்றினர்!

(சென்னை)

லட்சரூபா பெறுமதியான பெருமாள் சிலை ஒன்றை ஒரு கோஷ்டியிடமிருந்து கோவைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

முப்பது அங்குல உயரமுள்ள இச்சிலை பஞ்சலோகத்திலும் செய்யப்பட்டுள்ளது.

இக்கொள்ளையர் கோஷ்டியில் மூவர் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர்களிடமிருந்து 108 கைக்கடிகாரங்களும் கைப்பற்றப்பட்டன.

### மலையகமக்கள் எதிர்நோக்கும் பிரச்னை

# ஓடிக் கொண்டேயிருப்பதா ஓரிடத்தில் தரிப்பதா?

மலையகத் தமிழ் மக்களும் யாழ்ப்பாணத் தமிழ் மக்களும் வெவ்வேறு மக்கட் பிரிவினராக அல்லது சமூக அமைப்பைக்கொண்டவர்களாக வாழ்ந்துவந்துள்ளார்கள் என்பதையும் அவர்கள் ஒரே இன அமைப்பாக சங்கமமாக வேண்டிய வரலாற்றுத் தேவையினையும், அதற்குத் தடையாக இருக்கின்ற பொருளாதார அம்சத்தினையும் எனது முன்னைய கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். இதில் இம்மக்கள் எதிர்நோக்கும் சமூகப் பிரச்னைகள்தான் என்ன? என்பதையிட்டு இங்கு சற்று நோக்குவோம்.

## தேசிய உணர்வு

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட ஒருவரிடம் ''உமது ஊர் எது?'' என்று கேட்டால்; அதற்கு அவர் ''வட்டுக்கோட்டை'' அல்லது 'சுண்டிக்குளி' என இம்மண்ணில் அமைந்துள்ள ஏதோ ஓர் இடத்தின் பெயரைத் தங்குதடையின்றி கூறுவர். அதே கேள்வியை மலையகத் தமிழர் ஒருவரிடம் கேட்டால் அதற்கு அவர் இந்தியாவில் உள்ள 'திண்டுக்கல்' அல்லது 'திருச்சி' என இந்தியாவில் உள்ள ஏதோ ஒரு பெயரைத்

## தேசிய நிலையில்

பிரிட்டிஷ் ஆட்சியாளரால் தேயிலை ,இறப்பர் தோட்டங்களில் கூலி உழைப்புக்காக கொண்டுவரப்பட்டவர்கள்இம் மக்கள். உழைத்துக்கொண்டு மீண்டும் எப்படியாவது இந்தியாவுக்கே சென்று விடுவோம் என்ற எண்ணக் கருத்துடன் வந்தவர்கள். இம்மக்களது பொருளாதார நெருக்கடி பெருந்தோட்ட அபிவிருத்திக்கு சாதகமாக அமைந்தது. குறைந்த கூலி, அடக்குமுறை ஆகிய இவைகள் இம்மக்களை தேயிலை, இறப்பர் தோட்டங்களிலேயே முடக்கி வைத்தது. திரும்பிப்போகும் எண்ணம் சுக்கு நூறாக்கப்பட்டது.

## நிலத்துடனான உறவு

ஏறக்குறைய 60 வீதமான தேசிய வருமானம் இம்மக்களால் உருவாக்கப்பட்டது. தேயிலை, இறப்பர் தோட்டங்களில் அடிமைகளைப் போல் உழைத்தார்கள். எனினும் இம்மண்ணுக்கும் - இவர்கட்கும் எவ்வித உறவும் இருக்கவில்லை. ஒரு அங்குல நிலத்துக்கேனும் உரிமையுடையவர்களாக இருக்கவில்லை. லயத்துக் காம்பிராவோ தோட்டங்களோ நிரந்தரமான ஒன்றாக

— மாத்தளை இராஜலிங்கம் —

தான் கூறுவார். இன்னும் யாழ்ப்பாணத் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் ''இம் மண் எங்களுக்கு சொந்தமானது. இது பாதுகாக்கப்பட வேண்டும்' என்று உரிமைக் குரலெழுப்பி வரலாற்றில் ஒரு முனைப்பினை ஏற்படுத்தியுள்ளார்கள். தங்களது தேசியத் தலைவர்களாக தந்தை செல்வா, ஜீ. ஜீ. பொன்னம்பலம் போன்றோரை ஏற்று அவர்கட்கு மரியாதையும் செலுத்தி வருவதினையும் அறிகின்றோம். மலையகத் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் தங்களது தேசியத் தலைவர்களாக இலங்கையிலுள்ள எவரையும் ஏற்றுக்கொண்டிருப்பதாகக் கூறமுடியாது. மாறாக காந்தி, நேரு, அண்ணாதுரை, காமராஜ் போன்ற இந்தியத் தலைவர்களையே மானசீகமான முறையில் ஏற்றுள்ளதுடன் அவர்கட்கு மரியாதையும் செலுத்திவருகின்றார்கள். தங்களது வீடுகளில் அத்தலைவர்களின் உருவப்படங்களுக்கு கொடுத்து வைத்திருக்கும் முக்கியத்துவம் இதற்கு வெளிப்படையாக சான்று பகர்கின்றது.

1958-ம்ஆண்டுதொட்டுநாட்டில்இடம்பெற்றுவந்துள்ளவன்செயல்களின் போதும் இம்மக்கள் மத்தியில் அதனை எதிர்த்து முறியடிக்கவேண்டும் என்ற எண்ணமோ பாரம்பரியமாக தாங்கள் வாழ்ந்துவரும் பிரதேசங்களை பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்ற உரிமைப் பிரகடனமோ, நெஞ்சுறுதியோ உருவாகவில்லை. மாறாக உயிரைத்பாதுகாக்க எங்காவது சென்று தப்பித்துக் கொண்டால் போதும் என்ற பயந்தாங்கொள்ளி நிலையில் தான் வாழ்ந்து வந்துள்ளார்கள். சாதாரண மக்கள் மத்தியில் மாத்திரமின்றி மலையகத் தோட்டத் தொழிலாளர்களை பிரதிபலிக்கும் இ. தொ. கா. வின் முக்கியப் பிரமுகரும்கூட ஜூலைக் கலவரங்களின்போது இந்திய வம்சாவழியினரை இந்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனரே அன்றி இங்குரிமையும் தமது பாரம்பரிய பிரதேசத்தையும் பாதுகாத்து ஒரு நிலையான பாதுகாப்பிற்கான உரிமைக்குரல் எழுப்பி

இவர்கட்கு அமையவில்லை. எந்த நிமிடமும் தாங்கள் வாழ்ந்த தோட்டம், குடியிருப்பு லயத்துக் காம்பிரா இவைகளிலிருந்துவிரட்டப்படுவதெல்லாம் சர்வசாதாரண நிகழ்ச்சியாக அமைந்திருந்தன.

## குடியுரிமையும் ஒதுக்கலும்

குறிப்பிடப்பட்ட காலம் இந்நாட்டு அரசியலில் பங்கெடுத்து வந்தார்களாயினும் 1948-ம் ஆண்டு இம்மக்களது குடியுரிமை பறிக்கப்பட்டது. இச்சம்பவமானது இம்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயம் மாத்திரமன்றி மாபெரும் சமூக ஒதுக்கலும் கூட. இதன் நிமித்தம் இம்மக்களது அடிப்படை மனித உரிமைகள் யாவும் பறிக்கப்படலாயின. கல்வி, தொழில் வாய்ப்பு யாவும் சாகடிப்பட்டன. சமூகரீதியாக மற்றவர்களால் இழிவான முறையில் பட்டம்சூட்டப்பட்டவர்கள் குடியுரிமை சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்னை இவர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது.

1958-ம்ஆண்டுமுதல் தொடர்ச்சியாக பல வன்செயல்கள் இடம்பெற்றுள்ளன. இக்காலக்கட்டங்களிலெல்லாம் பாதிக்கப்படும் இலக்காக இம்மக்களே இருந்துவந்துள்ளார்கள். இவர்கள் இம்மண்ணின் மேல் முழுமையாக வெறுப்படைய இது காரணங்களாகிவிட்டது. மேலும் தோட்டச் சுவீகரிப்புப் போன்றவை இம்மக்களது எதிர்கால ஸ்திர வாழ்க்கைக்குச் சவாலாக அமைந்து நிற்கிறது எனலாம்.

## இயக்கம் - செயல்பாடு

இவர்கள் மத்தியில் பல்வேறான ஸ்தாபனங்கள் தோன்றின. எனினும் இவைகள் யாவும் இவர்களது தேசிய நலனைப் பாதுகாக்கும் அமைப்புகளாக உருவாகவில்லை. தொழில் பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சங்க ஸ்தாபனங்களே பிரதான பாத்திரம் வகித்தின. புத்திஜீவிகள் கூடி ஆங்காங்கு ஸ்தாபித்த பல்வேறான அமைப்புகள்கூட இம்மக்களைத் தேசிய உணர்வுடன் வாழச்செய்யவோ அடிப்படை உரிமைகட்கு உரிமைக்குரல் எழுப்பும்வகையில் தயார்செய்யவோ இல்லை. இந்த நிலைப்பாட்டால்தான் இம்மக்கள் தாங்கள் ''எங்காவது ஓடித்தப்பித்துக்கொள்வோம்'' என்ற உணர்வோடு உள்ளார்கள். பச்சையாகச் சொல்வதென்றால் ஓடிக்கொண்டே இருக்கின்றார்கள். ஓடிக்கொண்டிருக்கும் இச்சமூகம் எங்காவது ஓரிடத்தில் தரித்து நிற்கவேண்டும். இதுவே இச்சமூகத்தின் எதிர்காலத்தையொட்டி எடுக்க வேண்டிய தீர்மானம்-அதுவே இலட்சியமாகவும் இருக்க வேண்டும்.

# வெள்ளம் தேங்கி நிற்பதால் யாழ் மன்னார் பாதையில் பிரயாணிகள் படும்கஷ்டம்

(ம. வரதராஜன்)

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்கு கேரதீவு ஊடாகச் செல்லும் பயணம் யாழ்.-வவனியா-மன்னார் வீதியால் செல்வதைவிட செலவுச்சிக்கனமும் நேரச்சிக்கனமும் பாதுகாப்பும் நிறைந்தபோதிலும் அண்மைக்காலமாக இவ்வீதி சுண்ணாவில், முழங்காவில் பகுதிகளில் வெள்ளத்தால் மூடியிருப்பதால் இதனூடாகப் பயணம் செய்பவர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர். முழங்காவிலில் சுமார் ஒன்றரை மைல் தூரத்திற்கும், சுண்ணாவிலில் சுமார் நூற்றி ஐம்பதுயார் தூரத்திற்கும் வெள்ளம் தேங்கியுள்ளது. இப்பகுதிகளில் பிரயாணிகள் வள்ளங்கள் மூலம் பயணம் செய்கின்றனர். முழங்காவிலில் துணிவுள்ள பயணிகள் காட்டுப்பகுதி ஊடாக நடந்து சென்று மறுமுனையை அடைகின்றனர். இவர்களுடன்வரும் பெண்கள்பாடு பெரும் பாடுதான். ஓரிரு பெண்களுக்காக படகுக்காரர் படகை செலுத்த முடியுமா? எனவே படகுக்கு ஏற்ப ஆட்கள் சேரும்வரை பெண்கள் காத்துநிற்கவேண்டியுள்ளது. அத்துடன் தற்பொழுது வீசும் சோளகக் காற்றினால் படகும் எதிர்த்திசையில் விரைவாகச் செல்ல முடிவதில்லை. முழங்காவிலுள்ள பல வீடுகள், ஆலயங்கள். படித்த இளைஞர் விவசாய குடியேற்றத்திட்ட கட்டிடங்கள் வெள்ளத்துள் மூழ்கி உள்ளன. பாரிய பலா, மா மரங்கள் நீண்ட நாட்கள் வெள்ளத்துள் நின்றமையால் பட்டுப்போன நிலையில் காணப்படுகின்றன. 1957ம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தின் போதுகூட இவ்வீதி வெள்ளத்தால் மூடப்படவில்லை எனவும் முதியவர் ஒருவர் தெரிவித்தார். யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்கு இப்பாதையால் செல்ல இதுவரை காலமும் இரண்டு வாகனங்களே தேவைபட்டது. இடையில் கேரதீவு சங்குப்பிட்டி கடற்பகுதியில் பூநகரி ப. நோ. கூ. சங்கத்தின் படகுச்சேவையும் ஈடுபடுகின்றது. ஆனால் தற்போது நான்குவாகனங்களும் மூன்று படகுச்சேவைகளும் இப்பாதையூடாகச் செல்லத்தேவைப்படுகின்றன. அத்தோடு வவனியா ஊடான பயணச்செலவைவிட இதன் செலவும் அதிகரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சட்டர்டே றிவியூ’ வழக்கு
## செலவுத் தொகையின்றி தள்ளுபடி

(கொழும்பு)

சற்றர்டேரிவ்யூ பத்திரிகை மீதான பத்திரிகைத் தணிக்கையை ஆட்சேபித்து மனித உரிமை ஷரத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு ஆட்சேப மனுக்களை உயர் நீதிமன்றம் நேற்று செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்தது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான டி. விமலரத்ன, பேர்ஸி கொலின் தோமி, **பாரித்த ரணசிங்கா**, எம். எம். அப்துல் காதர், எச். ரொட்ரி**கோ ஆகிய ஐந்து பேரும் இந்த** தீர்ப்பை வழங்கினர்.

நியூ ஈரா பப்ளிக்கேசன் நிறுவனத்தைச் சேர்ந்த மேற்படி **பத்திரிகையின் உரிமையாளர்**, ஆசிரியர், வாசகர்களுமான கே. விஸ்வலிங்கம், காமினி நவரட்னெ, வண திஸ்ஸபால சூரியா உட்பட ஏழு பேர் இந்த ஆட்சேப மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். இந்த இரு மனுக்களையும் ஆதரித்து மேற்படி பத்திரிகையை தணிக்கை செய்தது அரசியலமைப்பின் 12வது ஷரத்தின் மனித உரிமைகளுக்கான சமத்துவத்தின் அடிப்படையிலும், அரசியலமைப்பின் 14 ஷரத்தின்படி பேச்சு சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் ஆகியவற்றின் அடிப்படையிலும், முரணானது என மனுக்களில் குறிப்பிட்டிருந்தனர்.

பத்திரிகை மீது தணிக்கையை மேற்கொண்டது. மேற்படி அரசியலமைப்பின் ஷரத்துகளுக்கு முரணானது அல்ல என்று தகுதி வாய்ந்த அதிகாரியும், ராஜாங்க அமைச்சின் செயலாளருமான டக்ளஸ் லியனகே தெரிவித்தமையைஏற்று உயர் நீதிமன்றம் மேற்படி மனுக்களை தள்ளுபடி செய்தது.

மனுக்களின் பிரதிவாதிகளாக ராஜாங்க அமைச்சின் செயலாளர், சட்டமாஅதிபர், பொலிஸ் மா அதிபர் ஆகியோர் குறிப்பிட்டிருந்தனர்.

மனுதார் தரப்பில் பிரபல சட்டத்தரணி எஸ். நடேசன் ஆஜராகினார். (சூ)

### கிளிநொச்சி கல்வி அதிகாரி

(பச்சிலைப்பள்ளி)

பரந்தன் வட்டாரக் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய திரு அ நங்கராசா, கிளிநொச்சி பிராந்திய கல்வி அலுவலகத்தின் வட்டாரக் கல்வி அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார்.

# வேலை பெற்றுத்தருவதாக லஞ்சம் வாங்கினராம்
## மட்டக்களப்பில் ஒருவர் கைது

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்திலுள்ள அமைச்சர் ஒருவரின் சிபார்சில் வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி 4ஆயிரம் ரூபாய் பேரம் பேசி 1050 ரூபாய் லஞ்சம் பெற்றதாக மட்டக்களப்பு வாசியொருவரை கொழும்பிலிருந்து வருகை தந்த லஞ்சத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளார்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

# இனங்களிடையே சமத்துவத்திற்கு ‘லயன்ஸ்’ கழகம் உதவ வேண்டும்
## லயன்ஸ் ஆளுநர் பேச்சு

(மாவிட்டபுரம்)

இன்று நமது நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் பிரச்சனைகளுக்குத்தீர்வு காண்பதை இலகுவாக்குவதற்கு இனங்களிடையே ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் மனப்பான்மை வளரவேண்டியதவசியம். சாதி, சமயம், மொழி ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு செயல்படும் லயன்ஸ் கழகங்கள் இந்த வகையில் பெரிதும் சேவை புரியவேண்டும்; இனங்களிடையே புரிந்துணர்வு ஏற்பட லயன்ஸ் கழகங்கள் வழி வகுக்கவேண்டும்.

இவ்வாறு மாவிட்டபுரம் லயன்ஸ் கழகம் அமெரிக்காவிலுள்ள லயன்ஸ் கழக தலைமையகத்தினால் அங்கீகரிக்கப்பட்டதையொட்டி காங்கேசன்துறை ஹாபர்வியூ ஹோட்டலில் நடந்த சிறப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துரையாற்றிய லயன்ஸ் கழக ஆளுநர் டாக்டர் பாமி இஸ்மாயில் கூறினார்.

யாழ். கிளிநொச்சி மாவட்டங்களின் லயன்ஸ் கழக பிரதிநிதிகளும், கொழும்பு,வத்தளை லயன்ஸ் கழக பிரதிநிதிகளும், லயன்ஸ் கழக மத்திய உறுப்பினர்களும் கலந்து கொண்ட இவ்விழாவில் ஆளுநர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

லயன்ஸ் கழகங்கள் குறுகிய கால செயல்திட்டங்களை மேற்கொள்வதை விடுத்து மக்களுக்கு நீண்டகாலம் பயன்படக்கூடிய நீண்டகால செயல்திட்டங்களை மேற்கொள்ளவேண்டும். பொதுமக்களின் தேவைகளை கருத்தில்கொண்டு அதற்கேற்ப செயல் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். மாவிட்டபுரம் லயன்ஸ் கழகம் வல்லை வைத்தியசாலையை பொறுப்பேற்று நடத்துவது பாராட்டத்தக்கது. இதற்கென அகில இலங்கை ரீதியில் மிகச் சிறந்த அபிவிருத்தித் திட்டத்திற்கான விருதும் வழங்கப்பட்டுள்ளது. இப்படியான திட்டங்கள் மக்களுக்கு பயன்படக்கூடியதாக விளங்குகின்றன என்றார்''

மாவிட்டபுரம் லயன்ஸ் கழகத் தலைவர் திரு. இ. மனோகரன் தலைமை வகித்துப் பேசுகையில் கூறியதாவது:-

மாவிட்டபுரம் பகுதியில் பல்வேறு தொழிற்சாலைகளும், தொழில் வளங்களும் நிறைந்திருப்பதுடன் பலதரப்பட்ட கல்விமான்களும், தொழில் நுட்பவியலாளர்களும், தொழில் அதிபர்களும் நிறைந்து விளங்குகின்றனர். இவர்களின் திறமைகளையெல்லாம் ஒன்று திரட்டி கூட்டுமுயற்சியில் ஈடுபட்டு சேவை புரிய மாவிட்டபுரம் லயன்ஸ் கழகம் தீர்மா**னித்துள்ளது**. இப்பணிக்கு சகலரும் ஒத்துழைப்பு நல்கி பணிகள் சிறப்பாக நிறைவேற உதவவேண்டும்'' என்றார்.'

இப்பரிசுகளுக்குரியவர்கள் யாழ்ப்பாணம்நாவலர் குறுக்கு வீதியில் திரு. ரி. நவரத்தினத்துடன் தொடர்புகொண்டு பரிசுகளைப் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். லயன்ஸ் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம் தனது சமூக சேவைத் திட்டங்களுக்கு நிதி சேகரிக்கும் நோக்குடன் கடந்த மாதம் நடத்திய அதிர்ஷ்ட சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:

1-ம் பரிசு 615 எச். டி. எஸ், வீரசிங்கா, இலங்கைவங்கிக் கிளை, கொழும்பு.

2-ம் பரிசு: 2809 என். சிவலிங்கம், 16/10, பொலிஸ் நிலையம், சாவகச்சேரி.

3-ம் பரிசு: 265 செல்வி எஸ். சாந்தலிங்கம், வேலணை.

ஏனைய பரிசுகள் வருமாறு:

256, மே/பா. டாக்டர் எஸ். சுப்பிரமணியம், 20, இந்து மகளிர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

803 பி. ரட்ணராஜா, யாழ். ஐக்கிய வியாபாரச்சங்கம், யாழ்ப்பாணம்.

917 இரட்ணம் அன் கம்பனி, 66, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

2744 செல்வி எஸ். அபிமனசிங்கம், சட்டத்தரணி, உடுவில்.

831 திரு. ராஜநாயகம், யாழ். ஐக்கிய வியாபாரச்சங்கம், யாழ்ப்பாணம்.

(8-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கால்களை வெட்டித் தொங்கவிட்டு நடனமாடி மகிழ்ந்தனர்!

### இரத்மலானையில் கோஷ்டி மோதல்

(கொழும்பு)

வாள்வெட்டுக்கு இலக்கான ஒரு கோஷ்டித்தலைவரின் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் போது அவரதுசகாகள் எதிர் கோஷ்டியினர் இருவரின் கால்களை வெட்டி எடுத்துவந்து இரத்மலானை கடற்கரையில் தொங்கவிட்டுவெடிகொளுத்தி நடனமாடி மகிழ்ச்சி கொண்டாடினுர்கள்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிசார் 24 சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளனர்.

கோஷ்டித் தலைவரின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தியவர்கள்மீது பழிக்குப்பழி வாங்கவே இவ்வாறு செய்துள்ளனர் எனக் கூறப்படுகிறது. இந்தக் கோஷ்டிக் கலவரம் கடந்த ஒரு மாதமாக இரத்மலானைப் பகுதியில் நடந்து வருகிறது. மக்கள் வாளால் சீவப்பட்டும், துப்பாக்கியால் சுடப்பட்டுமிருக்கிருர்கள்.

ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் இருக்கும் கோஷ்டித் தலைவர் மரணமானுல் இரத்மலானை, அன்குலான பகுதிகளில் ஆபத்தான விளைவுகள் ஏற்படும் என்று அப்பகுதி மக்கள் மத்தியில் அச்சம் நிலவுகிறது.

எதிர்க்கோஷ்டியைச் சேர்ந்த 8 முக்கிய நபர்களைத் தேடி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாள் வெட்டுக்கு இலக்கான கோஷ்டித் தலைவர் இரத்மலானை மீனவர் சமூகத்தின் முக்கிய தலைவர் எனக் கூறப்படுகிறது.

கடலில் வைத்து மீன்பிடி வலைகள் வெட்டப்பட்டது தொடர்பாகவே பிரச்னை தோன்றியதாம். (க)

---

போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை:

## 2 லட்சம் ரூபா வழங்க அரசஅதிபர் உறுதி!

(பச்சிலைப்பள்ளி)

ஐந்து லட்சம் ரூபா செலவில் பளையில் அமைக்கப்படவிருக்கும் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலைக்கு இரண்டு லட்சம் ரூபாவை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து வழங்க கிளிநொச்சி அரசாங்க அதிபர் முன்வந்துள்ளார்.

பச்சிலைப்பள்ளி தெங்குபனம் பொருள் உற்பத்திச் சங்கத்தினுல் இத்தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. என். ஜெயநாதனை சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. கே. தம்பிராசா தலைமையில் தூதுக்குழு ஒன்று அண்மையில் சந்தித்தபோது இதனை வழங்க சம்மதம் தெரிவித்தார்.

இத்தொழிற்சாலை ஆரம்பிப்பதனமூலம் பளைப் பகுதியில் வருடமொன்றுக்கு வீணுக ஊற்றப்படும் கள் ஒரு லட்சம் போத்தல்களில் அடைக்கப்பட்டுத் தட்டுப்பாடான காலங்களிலும் நாட்டின்ஏனைய பகுதிகளிலும் விற்பனை செய்யப்படவுள்ளது.

---

## யாழ்., மட்டக்களப்பு பஸ் சேவை சீர்கேடு

(இரா. உதயகுமார்)

யாழ்ப்பாணம்-மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை பஸ் சேவைகள் கடந்த சில மாதங்களாக ஸ்தம்பிதமடைந்திருப்பதால் இப்பாடசாலை மாணவ, மாணவிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில் இவ்விவகாரம் குறித்துப் போக்குவரத்து அமைச்சருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையை மட்டக்களப்பு தபால் அதிபரும், சமூக சேவையாளருமான திரு. இ. திருநாவுக்கரசு கேட்டுள்ளார்.

இதுபற்றி அவர் அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளதாவது:-

காலை-மாலை பஸ் சேவைகள் திடீரென டஇறைநிறுத்தம் செய்யப்படுவதாலும், பஸ்கள் தாமதமாக வருவதாலும் மாணவ மாணவிகள் பல மணிநேரம் வீதிகளில் காத்து நிற்கின்றனர்.

சில சந்தர்ப்பங்களில் மாணவர்கள் தாமதமாகப் பாடசாலைக்குச் செல்கிருர்கள். ஏமாற்றத்துடன் வீடு திரும்புகின்ருர்கள்.

பாடசாலை பஸ் சேவைக்கு காலையிலும், மாலையிலும் முன்னுரிமை வழங்கல், மேலதிக பஸ்களை ஈடுபடுத்தி சன நெரிசல்களைத் தவிர்த்துக் கொள்ளல், எக்காரணம் கொண்டும் பாடசாலை பஸ் சேவையை ரத்துச்செய்யக் கூடாதென ஆலோசனை தெரிவித்துள்ளார்.

அவர் தனது கடிதத்தில் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த மட்டக்களப்பு - யாழ்ப்பாணம் பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தமைக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

---


# உங்கள் எஸ்-லோன் பி.வி.சி. குழாய்களும் இணைப்புகளும் முற்றிலும் இலவசம்!

எஸ்-லோன் வீடுகட்டுவோர் சீட்டிழுப்பு.

பிரத்தியேகமாக எஸ்-லோன் பாவனையாளருக்கு



எஸ்-லோன் என்றே கேட்டு வாங்குங்கள். ஒவ்வொரு குழாயிலும் வியாபாரச்சின்னத்தை கவனித்துப் பாருங்கள்.

கேசரீஸ் இல. S/396

GARADS

ஏஸ்-லோன் விடு கட்டு வோரின் சீட்டிழுப்பில் உங்களுக்கும், உங்கள் வியாபாரிகளுக்கும், ஏன் உங்கள் குழாய்த்தொழிலாளருக்குமே பரிசில்கள் உண்டு...

இது எஸ்-லோன் பாவனையாளருக்கு மூன்று மாதங்கட் கொருமுறைநாம் தரும் பரிசாகும்.

இதோ எஸ்-லோன் பி. வீ. சி. குழாய் உற்பத்தியாளர்கள் தரும் ஒரு வெகுமதி.

நீங்கள் செய்யவேண்டியதாவது;

1. உத்தரவுபெற்ற எஸ்-லோன் வியாபாரி எவரிடமாவது சென்று எஸ்-லோன் குழாய்களையும் இணைப்புகளையும் வாங்குங்கள்.

2. அக்கொள்வனவுக்கு ஓர் பற்றுச்சீட்டினையும் அதனை உறுதிப்படுத்தும் ஓர் உறுதிச்சீட்டையும் கேட்டு வாங்குங்கள்.

3. பற்றுச்சீட்டையும் உறுதிச்சீட்டையும் கீழ்க்கண்டகூப்பனுடன் எமக்கு அனுப்புங்கள்.

நாம் சீட்டிழுப்பு நடத்துவோம். நீங்கள் அதிர்ஷ்டசாலியானுல் உங்கள் உறுதிச்சீட்டிலுள்ள முழுத் தொகையையும் ரொக்கமாக உங்களுக்கே திருப்பித் தருவோம். இதன்மூலம், எஸ்-லோன் தயாரிப்புகளை நீங்கள் முற்றிலும் இலவசமாகப் பெறுகிறீர்கள்.

பரிசுகள் இதோ:

பிரிவு அ

ரூ. 5000/முதல் ரூ15,000/- வரையிலான கொள்வனவிற்கு 10 பரிசுகள்.

பிரிவு ஆ

ரூ. 2500/- முதல் ரூ. 5000/- வரையிலான கொள்வனவிற்கு 10 பரிசுகள்.

பிரிவு இ

ரூ. 2500/- க்குக் குறைந்த கொள்வன விற்கு 25 பரிசுகள்.

சிறந்த வடிவமைப்புக்கும் வேலைப்பாட்டுக்கும் குழாய்த்தொழிலாளருக்குரிய சன்மானம் ரொக்கம் 5000/-.

வியாபாரிகளுக்கும் பரிசில்கள் உண்டு.

முக்கியம்;

த மஹாராஜா ஆர்கனேசேஷன் லிமிட்டெட்டினதும் அவர்களது விளம்பர முகவர்களான கெரட்ஸ் அட்வரைசிங் தாபனத்தினதும் ஊழியர்களையும் அவர்களது குடும்பத்தவர்களையும் தவிர்ந்த ஏனைய இலங்கைப் பிரசைகள் அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

இக்கூப்பனை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்;
எஸ்-லோன் வீடுகட்டுவோரின் சீட்டிழுப்பு,
467, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

பெயர் ______

முகவரி ______

கட்டிடத்தலத்தின் அமைவிடம் ______

குழாய்த்தொழிலாளரின் பெயர் ______

வியாபாரியின் பெயர் ______

முகவரி ______

எஸ்-லோன் குழாய்கள் இணைக்கப்படுவதை நேரிற் சென்று பார்வையிடுவதற்கு மஹாராஜா ஆர்கனேசேஷனின் பிரதிநிதியொருவருக்கு இந்நாஸ் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

தேதி ______ கையொப்பம் ______

இன்று பி.வி.சி. குழாய்களுள் முதற் தரமானது எஸ்-லோன்.

ஏன்? ______

கடைசி நாள் 15 ஆகஸ்து 1984

S-Lon நிகர் வேறில்லை

விலை ஒரு மீட்டர் 13/05 முதல்

உற்பத்தியாளர்கள்:
த மஹாராஜா ஆர்கனேசேஷன் லிமிட்டெட்

விற்பனை அலுவலகங்கள்:
467, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சார விநியோகம்

(பச்சிலைப்பள்ளி)

வவனியாவிலிருந்து ஓமந்தைக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது. தற்போது இணைப்பு வழங்குவதற்கான வேலைகள் நடைபெற்றுவருகின்றன.


**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம். ஜி.ஆர்,-லதா
**மீனவ நண்பன்**
(ஈஸ்மன் கலர்)

**வெஸ்லி** (மானிப்பாய்
தினசரி 2-30, 5-30
**வசந்தத்தில் ஓர் நாள்**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00
**EXORCIST II**

**சாந்தி** (யாழ். நகர்
Daily 10-30, 2-30, 4-30, 6-30
Christopher Lee
CAPTAIN AMERICA
Action-Thriller-Color

**வின்சர்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
**ஒளிவிளக்கு**
(புதிய வண்ணப் பிரதி)

**மனோகரா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15
4-45, 7-00
THE POSTMAN ALWAYS RINGS TWICE
கலர் (கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு)

**ஹரன்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30
4-30, 6-30
இடி அமீனின் ஆட்சியில் நடந்த கொடூரச் செயல்களைக் காணத் தவறாதீர்கள். இதுவே கடைசித் தடவை.
RISE AND FALL OF IDE AMEEN

**ரீகல்** (யாழ். நகர்)
10-30, 2-15, 4-30, 6-30
Edward Albert
GALAXY OF TERROR
(Horror-Terror-Adults)
(இதுபோல் பயங்கரமான படம் இதுவரை வந்திருக்கவே மாட்டாது.)
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு!

15—19
**RAJAH** Jaffna
Daily 10-30, 2-30, 4-30
6-30
Weng Weng
FOR YOUR HIGHT ONLY
(Color)
Screening with Popular Demand
Most Action Karate Film

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-15
ஜெய்சங்கர்
**வண்டிக்காரன் மகன்**

**வெலிங்டன்**
தினசரி 10-30, 2-30, 6-00
ரஜனிகாந்-ஸ்ரீதேவி
**தர்ம யுத்தம்**
(கலர்-புதிய பிரதி)


# செய்திச் சிதறல்

நமது நிருபர்கள்

## கருப்ப நீர் சேகரிப்பு நிலையம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த தலைமன்னார், பேசாலை ஆகிய பகுதிகளில் கருப்ப நீர் சேகரிக்கும் நிலையங்கள் அமைக்கப்படும் இதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (கி)

## தேங்காய் திருட்டு

(சாவகச்சேரி)

தேங்காயின் விலை உயர்ச்சி காரணமாக, திருடர்களின் கவனம் இப்போது தேங்காய்க் களவில் திரும்பியுள்ளது.

இவ்வாறான களவுகள் மட்டுவில் சரசாலை பகுதிகளில் அதிகரித்துள்ளது. இத் திருட்டின் பின்னணியில் இளைஞர்களே கூடுதலாக ஈடுபட்டு வருவதாகவும், இத் திருடர்களின் செயலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு காணி சொந்தக்காரர்கள் தீவிர முயற்சிஎடுத்து வருவதாகவும் அறியவந்துள்ளது.

## வீடு கையளிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கோட்டைமுனை கிராமோதய சபைப் பிரிவில் பிரதமரின் கிராம எழுச்சி 1984 நிகழ்ச்சியை நினைவுபடுத்தி பொன் தொழிலாளர் வீதியில் 10 இலட்சம் வீட்டுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வீடு ஒன்றை எதிர்வரும் 18ம் திகதி மண்முனை வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. சாம்பசிவ ஐயர் திறந்து வைக்கின்றார்.

இவ்வைபவத்திற்கு சபையின் செயலாளரும் விசேட சேவை அதிகாரியுமான திரு. இரா. உதயச்சந்திரன் தலைமை வகிக்கின்றார்.

## சொற்பொழிவு

(சாவகச்சேரி)

தென்மராட்சி இசைக் கலை மன்றத்தின் சார்பாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மாலையிலும் சைவசமயச் சொற்பொழிவும், தேவாரம், தியானம் என்பவற்றினை நடாத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

## பெரிய தம்பனையில் உரக் களஞ்சியம்

(பச்சிலைப்பள்ளி)

வவனியா மாவட்டத்திலுள்ள பெரிய தம்பனை என்னுமிடத்தில் 55 ஆயிரம் ரூபா செலவில் உரக்களஞ்சியமொன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இது அமைக்கப்பட்டு வருகிறது.

இப்பகுதியிலுள்ள விவசாயிகள் அனுபவித்து வரும் போக்குவரத்துக் கஷ்டங்கள் உரக் களஞ்சியம் அமைக்கப்படுவதனால், நீங்கி விடுமென எதிர்பார்க்கப் படுகிறது.

## விற்பனை நிலையம்

(சாவகச்சேரி)

கைதடி அகதிகள் முகாமில் நோர்வே மக்கள் நிவாரணச் சங்கத்தின் நிதியுதவியுடன், அறவழிப் போராட்டக் குழு நடாத்தி வரும் கைப்பணித் திட்டத்தில் தயாரிக்கப் படுகின்ற பொருட்களை பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் பொருட்டு கைதடியில் ஒரு விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் விற்பனை நிலையத்தில் அகதிகளால் தயாரிக்கப்பட்ட அப்பளம், பற்பொடி, பன்ன வேலைப் பொருட்கள், தையல் பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள் என்பன விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

## நிர்வாகிகள்

(சாவகச்சேரி)

சரசாலை இந்து இளைஞர் மன்றத்தின் புதிய நிர்வாகிகளாகப்பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு கு.ஞானேஸ்வரன், உபதலைவர்: செல்வி வ. கமலேஸ்வரி, செயலாளர்: திரு க.சிவசங்கரன், உபசெயலாளர்: செல்வி க மலர்விழி. பொருளாளர்: திரு க.கு. ஜெயகுமார், கணக்குப் பரிசோதகர்: திரு கே.எம் மசேசகரன், காப்பாளர்கள்: திரு ஞ நமசிவாயம் (வைத்தியர்), திரு த.காசிநாதன் (அதிபர்), திரு சி.வைரவப்பிள்ளை (அதிபர்)

மற்றும் பன்னிரண்டு பேர் கொண்ட செயற் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## நீரில் மூழ்கி மரணம்

(சாவகச்சேரி)

மித மிஞ்சிய மது போதையுடன் தோணியில் ஏறி, மீன் வாங்கச் சென்ற கெற்பேலியைச் சேர்ந்த சின்னையா சின்னவன் அல்லது பெட்டினன் என அழைக்கப்படும் 42 வயதுடையவர் கெற்பேலிக் கடலில் மூழ்கி மரணமானார்.

இவரது மரணம் தொடர்பாக விசாரணை நடத்திய சாவகச்சேரி திடீர்மரண விசாரணை அதிகாரி என். தர்மேந்திரன் விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## இன்றைய வானொலியில்

காலை
- 5-30 நாதாஞ்சலி
- 5-35 திருமுறைப் பாடல்கள் சியாமளா, சந்திரிகா
- 6-00 சைவ நற்சிந்தனை
- 6-05 இஸ்லாமிய நற்சிந்தனை
- 6-10 பாமாலை
- 6-25 நிகழ்ச்சிமுன்னோட்டம்
- 6-30 செய்திகள்
- 6-40 அறிவிப்புகள்
- 6-50 மெல்லிசைப் பாடல்கள்
- 7-00 தலையே நீ வணங்காய் திருக்கேதீஸ்வரப் பெருமான் ஆலயம்
- 7-30 மாகாணச் செய்திகள்
- 7-35 நாதஸ்வரம் நாமகிரிப் பேட்டை கிருஷ்ணன்
- 8-15 முஸ்லிம் நிகழ்ச்சி
- 8-45 காலை ஒலிபரப்பு முடிவு

மாலை
- 6-00 செய்திகள்
- 6-10 அறிவிப்புகள்
- 6-20 இப்தார் நிகழ்ச்சி
- 6-35 ஞானமிர்தம்
- 7-05 முஸ்லிம் நிகழ்ச்சி

இரவு
- 8-00 உலகச் செய்திகள்
- 8-10 களத்து மேடு
- 8-25 இல்லற ஜோதி
- 8-40 நாட்டுப் பாடல்
- 8-45 பேச்சு ''அரசாங்க சேவை இருபயன்ஒத்த சகாயச் சங்கத்தின் நூற்றாண்டு விழா''
- 9-00 செய்திகள்
- 9-10 செய்தியின் பின்னணியில்
- 9-15 அறிவிப்புகள் வாத்திய இசை
- 9-30 மெல்லிசைப் பாடல்
- 9-45 தாளவாத்தியக்கச்சேரி ஏ.எம். சந்திரசேகரன்
- 10-15 பக்திப் பாடல்கள்
- 10-30 ஒலிபரப்பு முடிவு

## ரூபவாஹினியில் இன்று

மாலை
- 5-30 நாட்டு வளம் (ஆங்கிலம்)
- 5-35 சிறுவர் இசை நிகழ்ச்சி (சிங்களம்)
- 6-00 விளையாட்டுப் பயிற்சி (தமிழ்)
- 6-30 பொதுஅறிவு(சிங்களம்)
- 6-55 செய்திகள் (தமிழ்)
- 7-15 சிங்கள நிகழ்ச்சி
- 7-45 வன வாழ்க்கை விவரணச் சித்திரம் (ஆங்கிலம்)
- 8-15 செய்திகள் (சிங்களம்)
- 8-35 எதிர்கால நிகழ்ச்சிகள்
- 9-05 பிரிட்டன் எவ். ஏ. கிண்ண உதைபந்தாட்டம்
- 9-30 செய்திகள் (ஆங்கிலம்)
- 9-50 எவ். ஏ. கிண்ண உதைபந்தாட்ட தொடர்ச்சி
- 10-30 உலகச் செய்தித் தலைப்புகள்
- 10-35 நிகழ்ச்சிகள் முடிவு

## இன்றைய பலன்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்வீட்டிலேயே பூசல்கள் தோன்றும் வாய்வுப் பதார்த்தங்களை தவிர்த்துக் கொள்ளவும் திருப்தியற்ற தினம்.

துலாம்: களஸ்திர வழியால் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறலாம் நீண்டநாள் பகை இன்று நிவர்த்தியாகும்.

விருச்சிகம்: ஒன்றை நினைத்தால் அது நடைமுறையில் வேறுவிதமாக அமையக்கூடும் வந்துசேரவேண்டிய பணத்தில் மீண்டும் தடை ஏற்படும்.

தனுசு: உயர்ந்த எண்ணங்கள் உங்களை புகழின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும் தெய்வ வழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும் கால்நடை விருத்திக்குமிடமுண்டு.

மகரம்: கடமையாற்றுமிடத்தில் புதிய நண்பர்களைத் தேடிக் கொள்வீர்கள் பொறியியலாளர்களுக்குப் பொன்னானதினம் வேண்டிய ஒருவரிடமிருந்து வரவேற்கத்தக்க செய்தியும் கிடைக்கும்.

கும்பம்: உண்மைவழி நின்று உயர்வடைவீர்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கை உங்கள்மீது பதியும் எதிர்பாராத அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு.

மீனம்: ஏமாற்றத்தின் அறிகுறிகள்காணப்படும் பெரியவர் ஒருவருடன் கருத்து வேற்றுமை உருவாகலாம் நாவடக்கம் நன்று.

திருமலை
வே. ரவீந்திரன்

## இந்தியா வர இவர்களும் விசாபெற வேண்டும்

[புதுடில்லி]

பிரிட்டிஷ் கனடா பாஸ்போட்வைத்திருப்போரும் இந்தியாவுக்கு வரும்போது விசா பெறவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலம் இந்தியா பாஸ்போர்ட் உள்ளவர்கள் விசா இன்றியேவர அனுமதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## பேச்சுப் போட்டி

(மானிப்பாய்)

யாழ். இராமகிருஷ்ண சேவாச்சிரமத்தினர் வருகிற ஆகஸ்ட் மாதம் பேச்சுப் போட்டியொன்றை நடத்தவுள்ளனர். கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற் பிரிவு, அதிமேற் பிரிவு என நான்கு பிரிவுகளாக நடைபெறும். இப் பேச்சு போட்டிகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக நடைபெறும் இப்போட்டிகளில் 60-ம் ஆண்டு ஜூலை மாதத்திற்குப் பின் பிறந்த மாணவர்கள் தங்கள் பாடசாலை மூலம் பங்குபற்றலாம் இப்போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்க்கு பரிசில்கள் வழங்கப்படுவதாகத் தெரிகின்றது. (ப)

## கருத்தரங்கு

(சாவகச்சேரி)

''சமுகக் கல்வியில்-இளைஞர் பங்கு'' எனும் தலைப்பிலான ஒரு வாரக் கருத்தரங்கு இம் மாதம் 25ம் திகதி தொடக்கம், இலங்கை மன்றக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இலங்கை மன்றக் கல்லூரியினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக்கருத்தரங்கில், நாடு முழுவதிலும் இருந்து சுமார் 30 பேர் பங்கு கொள்ளவுள்ளனர்.

## இல்லப் போட்டி

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திரு. நாகவேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இப் போட்டியில் பிரதம அதிதியாக யாழ் கல்வித் திணைக்கள மேலதிகப் பணிப்பாளர் திரு. இ. முருகையன் கலந்து கொள்வார்.

வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா மங்கல விளக்கேற்றிப் போட்டியை ஆரம்பித்துவைப்பார்.


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

GREEN FIELD TRAVEL OPERATORS
ரெலெக்ஸ் மற்றும் சர்வதேச
நேரடித் தொலைபேசித் தொடர்பு
குறைந்த கட்டணங்களுடன் இச்சேவையை உங்களுக்கு அளிப்பதால்
பணத்துடன் பொன்னான நேரத்தையும் வீணாக்காது
உங்கள் தொலைபேசியில் இருந்தே சர்வதேச அழைப்புக்கான இணைப்பை
எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
அத்துடன் ரெலெக்ஸ் செய்திகளை அனுப்பவும்
மீளப்பெறும் ரெலெக்ஸ் செய்திகளை காலவிரயமின்றி
உங்களுக்குக் கிடைக்கச்செய்யவும் நாம் முன் வந்துள்ளோம்.
எமது சேவைகளை ஒருமுறை பரீட்சித்துத் திருப்தியடைய
உங்களை வேண்டி நிற்கின்றோம்.
GREEN FIELD TRAVEL OPERATORS
26, MODEL MARKET (UPSTAIRS), JAFFNA.
(OPPOSITE PEOPLES' BANK)
Telephone No: 23875, 22784. Telex No: 22287.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவனியாவில் கொத்தணிமுறை

(பச்சிலைப்பள்ளி)

வவனியா மாவட்டத்தில் அடுத்த ஆண்டு முதற்தடவையாக கொத்தணிப் பாடசாலைகள் அமைக்கப்படவுள்ளன.

செட்டிகுள கல்வி வட்டாரத்தில் பூவரசங்குளம், நெடுங்குளம், செட்டிகுளம் ஆகிய மூன்று கொத்தணிகள் அமைக்கப்படவுள்ளன.

## றீகனின் சீன விஜயம்

[மாஸ்கோ]

''சீனப் பிரதமரின் அமெரிக்க விஜயத்தைப் போலவே, அமெரிக்க ஜனதிபதி றீகனின் சீன விஜயமும் பல நோக்கங்களைக் கொண்டிருந்தது. ஒவ்வொரு தரப்புக்கும் பொதுவான நோக்கமும், சொந்த நோக்கமும் இருந்தன'' என்று ஜனதிபதி றீகனின் சீன விஜயம் பற்றி சோவியத் டெலிவிஷனில் பேசுகையில் சோவியத் சர்வதேச தகவல்துறைத் தலைவர் லியனித் ஐம்யாதின் கூறினர்.

''இராணுவத்துறையில் தூர கிழக்கு நிலவரம் குறித்து அமெரிக்கா மற்றும் சீனவின் கருத்துகளில் ஓரளவு ஒற்றுமையை அடைவதற்குச் சீனத் தலைமையின் சோவியத் எதிர்ப்புப்போக்கை பயன்படுத்தலாம் என்று றீகன் நிர்வாகம் கருதிவருகிறது. அந்நிய மூலதன முதலீடுகளிலோ அந்நிய ராணுவ உதவியோயின்றி சீனவின் விவசாயம், தொழில், விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம், பாதுகாப்பு ஆகிய துறைகளை நவீனப்படுத்த வேண்டும் என்ற தமது திட்டத்தை அமுல்நடத்தச் சீன ஆட்சியாளர்களினுல் இயலவில்லை. இந்த இயலாமையை தனக்குசாதகமாகப் பயன்படுத்த றீகன் நிர்வாகம் முயலுகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக தேர்தல் கண்ணேட்டத்துடன் இந்த விஜயத்தை றீகன் மேற்கொண்டிருந்தார். சீனவுடன் உறவுகளைக் கொள்ளமுடியும் என்பதைக் காட்டுவது, அவரது சீன விஜயத்தின் முக்கியநோக்கங்களில் ஒன்ருகும் என்றும்'' லியனித் ஐம்யாதின் கூறினர்.

## யாழ். லயன்ஸ்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

3113 பி. சந்திரசேகரம், சரவணை மேற்கு, வேலணை.

2216 டாக்டர் செல்வி எஸ். தெய்வேந்திரம் யாழ். பெரியாஸ்பத்திரி.

3221 கே. கந்தசாமி, 640, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

4051 எஸ். பி. நாயகம், சூருவத்தை, சுன்னுகம்.

1361 எல். ஜே. திரவியம், கல்வியங்காடு.

4060 பி. தவராஜசிங்கம், 26, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

2183 என். ஆர். மைக்கேல் 44, குருநகர், யாழ்ப்பாணம்.

## வேலை பெற்றுத்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு தாமரைக்கேணி வாசியான க. புலேந்திரன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்ட நபராவர்.

அந்நபரை மட்டக்களப்பு குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவைச் சேர்ந்த திரு எஸ். ரவீந்திரராஜாவின் அநுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு ரி. யேசுரெத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது நீதிபதி 5 ஆயிரம் ரூபாய் உறுதிப் பிணையில் செல்லுமாறு உத்தர விட்டார்.

# கத்திக்குத்துக்கு ஒருவர் பலி!

(யாழ்ப்பாணம்)

யாழ். ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த 55 வயதான குமாரசாமி சந்தானம் கத்திக்குத்துக்குப்பலியானர்.

யாழ். மேலதிக நீதவான் கே. பி. எஸ். வரதராசா நேற்று மரண விசாரணை நடத்தினர்.

கடந்தமாதம் 21-ம் தேதி இவர் வயிற்றில் கத்திக்குத்துக்காயத்துடன் யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்று மரணமானர். பிரேதபரிசோதனை நடாத்துமாறும் உத்தரவிட்டு விசாரணையை மேலதிக நீதவான் இம்மாதம் 19-ம் தேதிக்கு ஒத்திவைத்தார். (க)

## கருத்தரங்கு

(சாவகச்சேரி)

கைதடி அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் அகதிகளுக்கான ஒருநாள் விவசாயக் கருத்தரங்கு இம்மாதம் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

வட பிராந்திய சர்வதேச சமாதான சேவை இயக்கத்தின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கருத்தரங்கில் ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, மாடு வளர்ப்பு காய்கறித் தோட்டம் என்பன தொடர்பான விரிவுரைகள் இடம் பெறவுள்ளன.

## வேள்வி நடத்த ஆயத்தம்

(மாவிட்டபுரம்)

கீரிமலை கருகம் பானை கவுணுவத்தை வைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழா வரும் சனிக்கிழமை அதிகாலை இடம் பெற உள்ளது.

மேற்படி ஆலயத்தில் வருடாவருடம் இடம் பெறும் பொங்கல் விழா இம்முறையும் வழமையான அம்சங்களுடன் இடம் பெறுமென கோவில் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதே நேரம் இங்கு உயிர்ப் பலியிடுவது தொடர்பாக பிரச்சனை உருவாகியிருப்பது தெரிந்ததே.

## யாருடையது

யாழ். மின்சார நிலைய வீதியில் ஒருசிறிய பேர்ஸுடன் ஒரு தொகைப் பணத்தினை ஒரு அன்பரும், திரு இ. மைக்கல் என்பவர் திரு சிவப்பிரகாசம் காசி விஸ்வநாதருடைய சாரதி லைசென்ஸ், ஒரு குறிப்புப் புத்தகம் ஆகியவற்றையும், டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி என்பவர் கிளிநொச்சிச் சந்தியில் மல்லாவியைச் சேர்ந்வர்களான திரு கந்தர் முத்தையா, திருமதி தங்கம்மா முத்தையா ஆகியோரின் அடையாள அட்டைகளையும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## விண்ணப்பப்படிவம் தட்டுப்பாடு

(பச்சிலைப்பள்ளி)

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராமசேவையாளர் பிரிவுகளில் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்திற்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

இளைஞர்களும், யுவதிகளும் கிராமசேவையாளர் அலுவலகங்களுக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

## இளைஞன் தற்கொலை

(சாவகச்சேரி)

சரசாலை தெற்கைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞன், மனவிரக்தி காரணமாக கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

பிரேத பரிசோதனை செய்த சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் நீ. சோமசுந்தரம் கிருமிநாசினி அருந்தியதால் மரணமானர் என அறிக்கையில் தெரிவித்தார். (க)

## நல்லூர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மத்து பொறியிலாளர் திரு. தவரத்தினம் தலைமையில் நடந்த கூட்டத்தில் ஆணையாளர் திரு. சிவஞானம் மேலும் கூறியதாவது:

''இங்கு 1977-ம் ஆண்டு ஒரு கல்யாண மண்டபம் உருவாக்கப்பட்டது. அதன் நோக்கம் பூர்த்தியாக ததினல் 1982 மே மாதம் 12-ம் திகதி இந்த விடயம் பற்றி சபைக்கு ஒரு அறிக்கை சமர்ப்பித்தேன். கல்யாண மண்டபத்தின் நோக்கம் தவறிவிட்டதாகவும் இதனுல் சபை வருடம் 36 ஆயிரம் ரூபா பராமரிப்புச் செலவாக செலவழித்தும் மக்களுக்கு பயனளிக்கவில்லை என்றும் மண்டபத்தை மாற்றியமைக்குமாறும் அறிக்கையில் தெரிவித்தேன். 82 மே 29ம்திகதி சபையின் நிதிக்குழுவினுல் அறிக்கை ஆராயப்பட்டு நிதி ஏற்பாடு செய்யாத காரணத்தினுல் இத்திட்டம் நிறைவேறவில்லை.

''தற்போது நிதி ஏற்பாடு செய்யப்பட்டதால் கல்யாண மண்டபம் 'இந்து விடுதியாக மாற்றப்பட்டது. மே மாத இறுதியில் இதனை பூர்த்தியாக்க முயற்சித்தும் சில தடைகள் காரணமாக பூர்த்தியாக்கவில்லை. ஜூலை முதலாம்திகதி இந்த விடுதி முற்றும் முழுதுமாக இயங்கும்.

''மாநகராட்சி மன்றம் பல இன மக்களுக்கு பொறுப்பாக சேவையாற்றி வரும்போது இந்த விடுதி ஆரம்பித்தது சரியா? என்று கேள்வி ஒன்றுள்ளது.

'இந்து விடுதி' ஆரம்பித்த முக்கிய நோக்கம் இந்து சூழலில், இந்துக்கள் கூடுதலாக வாழும் நல்லூரில் அமைந்துள்ளதால் தான். இந்து விடுதி என்றிருப்பதால் இந்துக்கள் மட்டும்தான் தங்கலாம் என்று கருதக்கூடாது. எல்லா மதத்தவரும் வரலாம், தங்கலாம். தங்குபவர்கள் இந்து முறையோடு அணுகி தங்கவேண்டும். இந்த விடுதியை 90 வீதம் இந்துக்கள் பயன்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

''இந்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாழும் இந்துக்கள் இதனைப்பயன்படுத்த வேண்டும். எந்தமுறையில் இதனைப் பாவிக்கிறர்கள் என்பதை அவதானித்துத்தான், இவ்விடுதியின் எதிர்கால முன்னேற்றம்பற்றிய நடவடிக்கை இருக்கும்.

''இத்திறப்பு விழாவிற்கு சுமார் 600 பேருக்கு அழைப்பு அனுப்பினேம். எல்லோரும் இங்கு வர இயலாதென்பதை அறிவோம். ஆனல் இப்படி ஒரு விடுதி இருக்கிறது என்பதை அவர்கள் அறிந்து கொள்ள அந்த அழைப்பு ஒருவாய்ப்பாக இருக்கும்.

''இந்த விடுதியை திறந்து வைக்க ஒருவரை தீர்மானித்திருந்தேன். ஆனல் சமீப [illegible] நிலையை அனுசரித்து இவ் விடுதியை நானே திறக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இந்த விடுதியை எல்லோரும் பயன்படுத்தி ஆதரிக்க வேண்டும்'' என்றர்.

நல்லை ஆதீன சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குகையில் கூறியதாவது: ''யாழ். குடாநாட்டிற்கு வருகை தருவோர் தங்குவதற்கு இடம் இல்லாத குறை இன்று நீக்கப்பட்டுள்ளது. 'இந்து விடுதி' என்று திருநாமம் சூட்டப்பட்டுள்ளது. திருநாமத்தோடு நின்று விடாமல் செயலிலும் அது 'இந்துவிடுதி'யாக இருக்க வேண்டும்.'' (க)

## முடியும் நடக்கிறது

ஆணைப் பெண்ணுக்க முடியுமா?

ஆணைப் பெண்ணுக்குவதென்ன.......... பெண்ணையும் ஆணுக்க முடியும் என்று மாயாஜாலவித்தைக்காரர்கள் கூறுவது சின்னவிஷயம்.

அதே நேரத்தில், சில வெளிநாடுகளில், கடவுச்சீட்டுகளில், அதாவது 'பாஸ்போர்'ட்டுகளில் 'தலையை மாற்றும்' ஜாலவித்தை நடப்பதும் பெரிய விஷயம் அல்ல.

இது ஓர் புதுக்கதை அல்ல. உண்மைச் சம்பவம். முல்லைத்தீவைச் சேர்ந்தவர் திரு. எஸ். சற்குணம். இப்பொழுது இவர்வசிப்பது திருநெல்வேலி.

கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்த இவருக்கு ஆறு மாதம் கழித்துப் பதிவுத்தபாலில் 'பாஸ்போர்ட்' வந்தது. மகிழ்ச்சியுடன் பிரித்துப் பார்த்தார். யாரோ ஒருவர் அவரது தலையில் சுத்தியலால் அடிப்பதுபோன்ற பிரமை எற்பட்டது!

காரணம்: அவரது பெயர் விலாசத்துக்கு குடியகல்வு குடிவரவு திணைக்களத்தினுல் அனுப்பப்பட்ட பதிவுத் தபாலில் இருந்த 'பாஸ்போர்ட்' செல்வி மகாலிங்கம் விஜயலட்சுமி எனும் பெண்ணுடையது!

திருநெல்வேலி என்ருல் 'குழப்பம்' என்பது தான் அர்த்தமா?

ஃ ஃ ஃ

அவர் ஓர் சமூகக் கல்வி ஆசிரியர்.

ஆறும் வகுப்பு. ஆசிரியர் நுழைகின்றர். பிள்ளைகள் மரியாதையுடன், வணக்கம் கூறுகின்றனர். 'அமருங்கள்' என்று கூறிவிட்டு, வந்த கையுடனே 'நவக்கிரக அர்ச்சனை'யை ஆரம்பிக்கின்றர் ஆசிரியர்.

கேள்வி-பதில் நேரம் ஆரம்பிக்கிறது.

ஓர் மாணவி: ''இலங்கையில் அதிக வருமானம் ஈட்டிக்கொடுக்கும் கனிப்பொருள் என்ன சேர்?''

ஆசிரியர்: (சிரித்துக்கொண்டே) பலாப்பழம்.

மற்றுமொரு மாணவி: ''இல்லை சேர். இரத்தினக்கல்''

இரத்தினக்கல் என்ருல் இரத்தினபுரி என்று அர்த்தம். பலாப்பழம் என்ருல் சாவகச்சேரி தானே.

-'ஊடுருவி

## இணுவிலில் இன்று மஞ்சம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோவில் மஞ்சத்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை ஏழு மணிக்கு நடைபெறவுள்ளது.

## சண்முகார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீசெந்தில் கதிர் வேலாயுதசுவாமி கோவிலில் நேற்று வியாழக்கிழமை முதல் காலை 7-15 மணிக்கு விசேட அபிஷேகமும், சண்முகார்ச்சனையும், மாலை 3-30 மணிக்கு சந்தனக்காப்புச் சாத்தப் பெற்ற செந்தூர் முருகனுக்கு நியாசபூர்வ சண்முகார்ச்சனையும், திருவிழாவும் நடைபெற்றுவருகிறது.

இரண்டாம் நாளாகிய இன்று காலையும், மாலையும் சண்முகார்ச்சனைநடைபெறும்.

## 50 ரூபா அபராதம்

(மன்னர்)

இரவு நேரத்தில் விளக்கு இல்லாமல் சைக்கிள் ஓட்டிய 7 பேருக்கு மன்னர் ஆரம்ப நீதிமன்ற நீதவான் திரு எஸ். யேசுதாசன் தலா 50 ரூபா அபராதம் விதித்தார்.

அத்துடன் விளக்கு இல்லாமல் சைக்கிள் ஓட்டிய 4 பேருக்கு பிடி ஆணையும் பிறப்பித்துள்ளார். இவர்கள் நீதிமன்றத்திற்கு வராததாலேயே பிடி ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. (கி)

## தங்கப்பாளம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டனர்.

இராணுவத்தினர் 3 தங்கப்பாளங்களையும் சில நகைகளையுமே மீட்டனர்.

சுங்க கலக்டர் திரு. பாலேந்திரா, உதவி கலக்டர் திரு. வி. பொன்னையா, சுங்க அதிகாரிகள் திரு. எம். கமலநாதன், திரு. ப. அமரதாசா, திரு. இரத்தினசபாபதி ஆகியோர் விசாரணையை மேற்கொண்டனர்.

தங்கப்பாளங்களை பறிமுதல் செய்து நால்வருக்கும் 3,22,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (க)

## சிங்கராயர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் வணபிதா சிங்கராயரும், திருமதி நிர்மலா நித்தியானந்தனும், மற்றும் மூவரும் 1982ம் ஆண்டு நவம்பர் மாதம் கைதுசெய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். (வெ)

## இரு இலங்கையர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்மேற்குபிரதேசத்துக்குள் மேற்படி மூவரையும் சட்ட விரோதமாக கொண்டுசெல்ல முயன்றபோது அவர்கள் அரசாங்க அதிகாரிகளினுல் கைது செய்யப்பட்டனர். கொண்டு செல்லப்பட்ட மூவரும் ஸ்பெயின் தேசத்துக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்த இருவர்மீதும்பிரான்ஸ் அரசாங்கம் வழக்குத்தொடரவுள்ளபோதும் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பற்றி எது குறிப்பிடப்படவில்லை. (சூ)

## தோட்டச்செய்கை

(மாவிட்டபுரம்)

உணவு, போஷாக்கு கொள்கைத் திட்டத்தின் பிரகாரம் பாடசாலைகளில் சிறிய அளவிலான தோட்டச்செய்கைகளை மேற்கொள்ளத் திட்ட அமுலாக்கல் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூன் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org